JUDICIAL FORM NO.53

{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC//141/2018 |
| | : | Prosecution P.W –7 |
| NAME | : | Ummul salma |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Wednesday of 13.07.2022.

**முதல் விசாரணை**

நான் தற்போது தென்காசியில் குடியிருந்து வருகிறேன். நான் வீட்டை கவனித்து வருகிறேன். அ.சா.1 என் கணவர் ஆவார். எனக்கு ஆஜர் எதிரியை தெரியும்.எதிரி நசீர் முகமதுவை தெரியும். கடந்த 18.12.2017 ம் தேதியன்று இரவு 08.30 மணிக்கு நான் என் வீட்டில் இருக்கும் போது எனக்கு அலியா சாகுல் ஹமீதுதா என்று எனக்கு தெரியவில்லை, ஆனால் எனக்கு போன் செய்து, எதிரிகள் A1 டீ ஸ்டால் பக்கம் வைத்து அடித்து காலை ஒடித்து விட்டதாக தகவல் சொன்னார்கள். நான் உடனே என் கணவரை தென்காசி அரசுமருத்துவமனையில் சென்று பார்த்தேன். அங்கு மறுநாள் வந்த போலிசார் விசாரித்துவிட்டுஎன் கணவரிடம் புகார் வாக்குமூலம் வாங்கினார்கள்.அந்த புகார் வாக்குமூலம் என்னிடம் காட்டப்படுவதுதான்,அதில் உள்ள அறிவேன் சாட்சியாக உள்ள கையொப்பம் என்னுடையதுதான். என் கணவருக்கு தென்காசி அரசு

மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்து இருபது நாட்களுக்கு மேல் சிகிச்சையில் இருந்தார். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்களுக்கு குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.